# இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர். எஸ். ஜெய்சங்கர் அவர்களின் பிலிப்பைன்ஸ் பயணம் (மார்ச் 25-27, 2024)

மார்ச் 27, 2024

வெளியுறவுத்துறை அமைச்சர்(EAM) டாக்டர். எஸ். ஜெய்சங்கர் அவர்கள் 2024 மார்ச் 25 முதல் 27 வரை பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு அதிகாரப்பூர்வ பயணம் மேற்கொண்டார். இதில் EAM அவர்கள் பிலிப்பைன்ஸ் நாட்டின் அதிபர் திரு. பெர்டினாண்ட் ஆர். மார்கோஸ் ஜூனியரைச் சந்தித்து இந்திய பிரதமர் மோடி அவர்களின் வாழ்த்துகளைத் தெரிவித்தார். பின்னர் இந்தியா-பிலிப்பைன்ஸ் கூட்டாண்மையில் சமீபத்திய முன்னேற்றங்கள் மற்றும் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான கூட்டு முயற்சிகள் குறித்தும் அவர் அதிபர் மார்கோஸ் அவர்களிடம் விளக்கினார்.

EAM அவர்கள் பிலிப்பைன்ஸ் நாட்டின் வெளியுறவுத்துறை செயலாளரான HE திரு. என்ரிக் ஏ. மனலோவையும் சந்தித்தார். இதில் 2023 ஜூன் மாதம் புது தில்லியில் நடைபெற்ற இருதரப்பு ஒத்துழைப்புக்கான கூட்டு ஆணையத்தின் ஐந்தாவது கூட்டத்திற்குப் பிறகு இருதரப்பு ஒத்துழைப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை குறித்து இரு அமைச்சர்களும் விவாதித்தனர். மேலும் அரசியல் பரிமாற்றங்கள், வர்த்தகம் மற்றும் முதலீடு, பாதுகாப்பு மற்றும் கடல்சார் பாதுகாப்பு, மேம்பாட்டுக் கூட்டு, சுகாதாரம் மற்றும் மருத்துவம், வேளாண்மை மற்றும் உணவுப் பாதுகாப்பு, கல்வி, உள்கட்டமைப்பு, புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் மக்கள் பரிமாற்றங்கள் உள்ளிட்ட முழு அளவிலான ஈடுபாடுகளையும் ஆய்வு செய்தனர். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிகளையும், பரஸ்பர நலன் சார்ந்த பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சினைகளை ஆராய்வதையும் அவர்கள் ஆராய்ந்தனர். பின்னர் இருதரப்பு உறவுகள் நிறுவப்பட்டதன் 75-வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் நினைவு நிகழ்வுகளை நடத்தவும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

பிலிப்பைன்ஸ் நாட்டின் தேசிய பாதுகாப்பு செயலாளரான HE திரு. கில்பர்ட் தியோடோரோ அவர்களையும் சந்தித்து, பாதுகாப்பு மற்றும் கடல்சார் பாதுகாப்பில் வளர்ந்து வரும் ஒத்துழைப்பை இரு

தலைவர்களும் வரவேற்றனர். மேலும் திறன் மேம்பாடு, கூட்டுப் பயிற்சிகள், தகவல் பரிமாற்றம் மற்றும் பாதுகாப்பு தொழில்துறை ஒத்துழைப்பு ஆகியவற்றின் மூலம் இருதரப்பு பாதுகாப்பு உறவுகளில் தற்போதைய வேகத்தை ஒருங்கிணைப்பது குறித்து கணிசமான விவாதங்கள் நடத்தப்பட்டன.

தற்போது மணிலா துறைமுகத்தில் இருக்கும் இந்திய கடலோர காவல்படைக் கப்பலான சமுத்ரா பஹரேதார் கப்பலில் பிலிப்பைன்ஸ் அரசின் மூத்த அதிகாரிகள், பிலிப்பைன்ஸ் பாதுகாப்புப் படை உறுப்பினர்கள் மற்றும் இந்திய சமூகத்தினரின் கூட்டத்தில் EAM அவர்கள் உரையாற்றினார்.

EAM அவர்களின் வருகை, இந்தியா மற்றும் பிலிப்பைன்ஸ் இடையே வளர்ந்து வரும் இருதரப்பு உறவுகளுக்கு மேலும் உத்வேகம் அளிப்பதற்கும், தற்போதைய நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வதற்கும் இந்த பயணம் சரியான நேரத்தை வழங்கியுள்ளது.

**மணிலா**
**மார்ச் 27, 2024**